சார்நிலைக் கருவூலம்
03 FEB 2022

**திருவாரூர் மாவட்ட கருவூல அலுவலரின் செயல்முறை ஆணைகள்.**

**பிறப்பிப்பவர்: ஆர்.முருகவேல், எம்.ஏ., எம்.பில்.,**

ந.க. எண்: 00251 / 2022 / அ1 , நாள்:.28.01.2022.

பொருள் பணியமைப்பு - கருவூல கணக்குத்துறை - திருவாரூர் மாவட்ட கருவூலஅலகு - தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் தொகுதி IV-ல் அடங்கிய பணிகளுக்கான போட்டித்தேர்வு **2018-2019** மற்றும் **2019**-2020ல் தேர்ச்சி பெற்றது - திருவாரூர் மாவட்டக் கருவூல அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிபுரிந்து வரும் செல்வி.வை.நந்தினி, இளநிலை உதவியாளர் என்பவருக்கு பணிவரன்முறை செய்து ஆணையிடல் - தொடர்பாக.

பார்வை
1. செயலர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாயைம், சென்னை அவர்களின் கடித எண் 2505/PSD-I /2020, நாள். 30.05.2020..
2. ஆணையர், கருவூல கணக்குத்துறை, சென்னை அவர்களின் செயல் முறை ஆணை ந.க. 18541/2020/சி3, நாள்.31.07.2020.
3. கருவூல அலுவலர்,திருவாரூர் அவர்களது செயல்முறை ஆணை ந.க.4130/2020/அ1, நாள்: 10.08.2020.
4. உதவி கருவூல அலுவலர், சார்நிலை கருவூலம், நீடாமங்கலம் அவர்களின் கடிதம் காமு.அ.எண்.10/2022/அ1, நாள்: 24.01.2022
4. இதர தொடர்புடைய ஆவணங்கள்

ooOoo

ஆணை:-

பார்வை 1-இல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தொகுதி IV-ல் அடங்கிய பணிகளுக்கான போட்டித்தேர்வு **2018-2019** மற்றும் **2019-2020**- ல் தேர்ச்சிப் பெற்று, தமிழ்நாடு அமைச்சுப்பணிகளில் இளநிலை உதவியாளராக கருவூலக் கணக்குத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை 2ல் காணும் செயல்முறை ஆணையின் வழியாக, பணிநியமனம் வழங்கப்பட்ட செல்வி.வை.நந்தினி என்பவருக்கு தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பொதுவிதி 23(ஏ)யின் படி அவர்கள் இளநிலை உதவியாளராக முறையாக பணியில் சேர்ந்த **10.08.2020** முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

0255161

மேலும், இந்த பணிவரன் முறை ஆணையானது சென்னை உயர்நீதிமன்றம் / சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக்கிளை ஆகியவற்றில் இந்த பணி அமர்வு சம்மந்தமாக நிலுவையில் உள்ள வழக்குகளின் தீர்ப்புகளுக்கு உட்பட்டது .

("The Regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras / Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to the recruitment to the post included in CCSE-IV for the year 2018-2019 and 2019-2020 " )

மேற்கண்ட பணியாளர் பணிவரன் முறை செய்யப்பட்ட நாள் முதல் தொடர்ச்சியான மூன்றாண்டுகளில் இரண்டாண்டுகாலம் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார்.

மேலும், மேற்குறிப்பிட்ட பணியாளர் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் நடத்தப்படும் அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு அதன் முடிவில் நடத்தப்படும் தேர்வுகள் அனைத்திலும் தேர்ச்சி பெற வேண்டும். அவ்வாறு தேர்ச்சி பெற்ற பின்னரே தொடர்புடைய பணியாளருக்கு தகுதிகாண் பருவம் முடித்தமைக்கான ஆணைகள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

28/1/22

கருவூல அலுவலர்,
திருவாரூர்.

28/1/22
28/1/22

பெறுநர் : செல்வி.வை.நந்தினி,
இளநிலை உதவியாளர்,
சார்நிலை கருவூலம்,
நீடாமங்கலம்.
(உரிய வழியாக)

நகல்:
1. உதவி கருவூல அலுவலர், சார்நிலை கருவூலம், நீடாமங்கலம்.
(பணிவரன்முறை செய்யப்பட்ட விவரத்தை தொடர்புடைய பணியாளரது பணிப்பதிவேட்டில் பதிவு செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறது)
2. இருப்பு கோப்பு .